# தத்துவபோதினி.

பு. ௩.] சென்னைப்பட்டணம் ௧௮௬௬ௐ ஜூன்மீ ௭௨. [இல. ௨.

ஏகமேவாத்³விதீயம், ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்³ரஹ்ம, ஶாந்திஸ்வரூபம், ஶிவம், த³மோதா
யஜ்ஞாத்ரதாரம் தஸ்மாத்³விவேகநாயம், யஸ்த³ஷ்டிப்ரஶ்ரதாமோஹவஷி, ஸர்வ
தயோத்³வோமேவோவிபக்ஷி.

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

## அட்டவணை.

விஷயங்கள்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| ௧. கடவுள்துதி | ௨௭ | ௭. மருநூல் | ௩௫ |
| ௨. விளம்பரங்கள் | ௨௮ | ௮. நிருபம் | ௩௬ |
| ௩. தத்துவபோதினி | ௩௦ | ௯. பகவத்கீதை | ௪௦ |
| ௪. ருக்குவேதசம்ஹிதை | ௩௨ | ௧௦. நிருபம் | ௪௧ |
| ௫. உபநிஷத்து | ௩௩ | ௧௧. சந்தாதாரர்அட்டவணை | ௪௨ |
| ௬. பேகன்வியாசம் | ௩௪ | | |


சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

## கடவுள்துதி.

### இராகம் - எதுகுலகாம்போதி - சாப்புதாளம்.

பல்லவி.

உலகாளும்முனைப்பணிவோர்கள் - பிரம,
உத்தமபதவியரோ.

அநுபல்லவி.

பரமாத்மனேஸர்வ - பாபபஞ்சகனே
நிரதிசயா - நந்த - நிர்மலரூபனே............(உலகாளு.)

சரணங்கள்.

௧. தனையெங்குமுளன் - துரும்புதன்னிலுமுளன்
தினைவேலியிலுமுளன்-

மறையாதியிலும் - மறையகந்தம்தன்னிலும்
உறைவோன் நீயல்லவோ-
இறைவோ, னேபுரு, விலகல், சீலனே, வரதா,
இறைபுநா, னுனதன்மையடையும்வழியில்,
செலவருளுவாய்சாமி..................(உலகாளு.)

உ. உருவின்றியேநீ, உருவினையனைத்திற்கும்
தருகின்றாய், பிரமா -
சரமின்றியேயா, யிரங்காததொழிலைநீ
புரிகின்றாய்கொடியில்.
சரணின்றிமன, விரைவனதிக, விரைவாய்த்,
திரிகிறாய், இதின்விந்தை, யுளதோவென்றுநான்,
களித்துமகிழ்வது..........................(உலகாளு.)

ங. இரவும்பகலு, மிலங்குந்தாரகைகளும்,
இரவியுந்தேவனே.
சிரமேல்கொண்டுன், தசரணையைத்தின
புரிகின்றதேகண்டும்,
நரகோடிகள்மா, த்திரம்தம், கடமை, மறந்து,
திரிகின்றார், துதிசெய்ய, வுனையே, அருள்க,
தயாரசநிதியே.......................... (உலகாளு.)

## விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய-பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

## இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்திலுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.................க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்..... ..... .........க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத்தொடங்குவோர்க்குச சந்தாவீதம் - அ- அணு உயர்த்தப்படும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனல், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதர்க்காக, ரூபாய் ஒன்றுக்கு - ஒரு அணு வீதம்-வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாரும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

---

## புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். 0 - ௪ - 0
தபால்கூலி............ 0 - ௧ - 0

தெலுங்கு பாலவியாகரணம்... 0 - ௪ - 0
தபால்கூலி............ 0 - ௧ - 0

வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் விக்கிரஹ ஆராதனத்தைக்குறித்தது நன்ருய் பயிண்டுசெய்தது,............ 0 - ௮ - 0
தபால்கூலி............ 0 - ௨ - 0

ஷை மட்டபயிண்டுள்ளது... .. 0 - ௭ - 0
தபால்கூலி............ 0 - ௨ - 0

வேத சமாஜத்தார் இரண்டாவது விண்ணப்பம் பெண்கள் கல்வியைக்குறித்தது........ 0 - ௮ - 0
தபால்கூலி............ 0 - ௨ - 0

தமிழில்ஸ்தோத்திரபாடம்பிரதி 0 - ௧ - 0
தபால்கூலி............ 0 - ௧ - 0

௧௮௯௫ வரு மேமாசம் முதல் ௧௮௯௯ வரு ஏப்பிரல்மீ வரையிலுள்ள தத்துவபோதினி பயிண்டுசெய்தது. ...... ௩ - 0 - 0
தபால்கூலி......... .. 0 - ௪ - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒவ்வொன்றுக்கும் குறித்த தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

## நிருபக்காரருக்கு விளம்பரம்.

இந்தப்பத்திரிகையில் பிரசுரமாகும்படி தயைசெய்து நிருபமெழுதியனுப்பும் கனவான்கள், அதுபிரசுரமாக வேண்டியதற்கு முன்மாதமே, ௨0௳ க்குள்ளாக அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாகவிருக்கும்.

அப்படி யனுப்பப்படும் நிருபங்களில் நிருபக்காரருடைய இருப்பிடமும் கையெழுத்துமில்லாதபக்ஷத்தில் அவைகளைப்பிரசுரப்படுத்துவது சாத்தியமா யிருக்கமாட்டாது.

எங்கள்கொள்கைகளை ஆக்ஷேபித்தெழுதினல் நாங்கள் பிரசுரம்செய்யமாட்டோமென்கிற கருத்தினலே நிருபமெழுதமனமுடைய பலர் எழுதாமலிருப்பதாய் நாங்கள் கேள்விப்படுகிறோம். உண்மை வெளியாகவேண்டியதே எங்கள்கருத்தாகையால், எங்கள் கக்ஷிகளை யாக்ஷேபித்தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில் பிரசுரஞ்செய்வது மாத்திரமேயன்றி, பழுதானவையாய்த் தோன்றும் ஆக்ஷேபங்களுக்கு எங்களாலியந்தவரையில் சமாதானம் சொல்லவும் சரியான ஆக்ஷேபங்களை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறோம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னலும் எங்களுக்குச் சம்மதமே யாகிலும், வியக்தி தூஷணங்களடங்கிய நிருபங்களை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகையால் அதற்காக மன்னிக்கக்கோருகிறோம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்மைபரவவேண்டுமென நாங்கள் முயலுகி

றவாறே நிருபக்காரரும் பரிசுத்த சிந்தையுடன் தங்கள் கருத்துகளை வெளியிடுவார்களென்று நம்புகிறோம்.

---

## தத்துவபோதினி.

சோதரர்களே! சென்றமாதம்,௧௯௨ சனிக்கிழமை மாலையில் யாங்கள் சென்னையில் கண்ணுற்ற அதிரம்மியமான வோர்திருவிழாவை நமதன்பர்செவிகளின்புறவினாவுடன் இங்குவரைய முயலுகிறோம். ஷை குறித்ததினத்தில் சென்னைப் பூக்கடையண்டையிலுள்ள கல்யாணமந்திரமென்னும் மண்டபத்தில வீற்றிருக்குமோர் பாலிகாபாடசாலையின் ஆறுவது வருஷாந்திர மஹோத்சவம்நடக்கப்போகிறதென்றறிந்து அங்குசென்றனம். அவ்வழகியமண்டபத்தில் அச்சமயத்தில் அனேக ஐரோப்பிய கனவான்களும் சுதேச கனவான்களுங் கூடியிருக்க, போர்டு மெம்பராகிய கனம்பொருந்திய ஆனரேபில், சார்லெஸ்பெல்லி துரையவர்கள் அக்கிராசனதிபராக வீற்றிருந்தனர். அப பாடசாலையிற்றலைமையாயுள்ளபாலிகைகளில் சிலர் உசிதவஸ்திராபரண பூஷிதராகியும், சுகந்த சுந்தரபுஷ்பாலங்கிருதராகியும், யாவருங்கண்டு அதிசயித்து மகிழும்படி அதிசீரானநடையோடும் ஒழுக்கத்துடனும், அக்கிராசனதிபருக்கு முன்னிலை வீற்றிருந்தனர். இவ்வாறுகூடிய திவ்விய சபையில், அப்பாடசாலையின் விசாரணை கர்த்தராகிய - ம - ா - ா. பாபுவைய்யரவர்கள் எழுந்து பாடசாலையின் வருஷாந்திரிபோர்ட்டை வாசித்தனர். பின்பு அவ்விடத்தில் வந்திருந்த சுதேசகனவான்களில், ம-ா-ா. ம - சிங்காரவேலுமுதலியார்-பிஏ-அவர்களும், ப-சுப்பராயலுசெட்டியார் - பிஏ-பிஎல்-அவர்களும், முறையே, பாலிகாவித்தியாப்பியாசத்தின் ஆவசியகத்தைப்பற்றியும், அப்பாடசாலையைக்காத்து அபிவிருத்திசெய்யவெண்டிய கடமையைப்பற்றியும் எழுதப் பட்டிருந்த பிரசங்கங்களை வாசித்தார்கள். கடையில் அக்கிராசனதிபர் எழுந்து பாலிகைகளுக்கு ஹிதோபதேசஞ்செய்து பரிசுகொடுப்பித்த பின்னர்சபைகலைந்தது.

இப்பாடசாலையின் வரலாற்றை இங்கு சற்று விசிதப்படுத்துவதுசிதமென்று கருதுகின்றோம். இஃது ஆறுவருஷத்துக்குமுன்பாக, ஸ்காட்லண்டு மிஷனைச்சேர்ந்த சென்னை பிரீசர்ச்சு சபையாரால் ஸ்தாபிதமாகி, சிலநாளுக்குமுன் பல்லாரி ஜில்லா கலெக்டராயிருந்து இறந்துபோன அதிதயாளபுருஷராகிய, ஆர்த்தர்ஹாத்வே துரையவர்களால், போஷிக்கப்பட்டுவந்தது. இதைத்தொடங்குங்கால் மூன்றுபாலிகைகளுக் கதிகமா யில்லாமலிருந்தும், இப்பொழுது இதில், பிராம்மண கன்னிகைகளுடனுங்கூடி, நூற்றிருபது பாலிகைகள் வாசிக்கின்றனர். இப்பாடசாலை கிருஸ்துவர்களால் ஏற்பட்டு கிருஸ்துவர்களால்போஷிக்கப்பட்டபோதிலும் ,இதில் கிருஸ்துவர்களையாவது, மஹம்மதீயரையாவது, வேசிகளையாவது, சேர்ப்பதில்லை. இந்துக்களின் பொருட்டே, ஏற்படுத்தப்பட்டு, சென்ற ஆறுவருஷகாலமாய் ஆயிரம்பெண்களுக் கதிகமாகவே வித்தியாமிருதம் பெற்றுவந்தனர். இப்பாடசாலை இவ்வாறு இந்துக்களின்பொருட்டே யிருப்பினும் இந்துக்க ளொருவரும் இஃதை போஷித்தாரில்லை. மேற்குறித்த கனவானாகிய ஹாத்வேதுரையவர்கள் இணையற்ற தயாளத்தோடு இப்பாடசாலையின்பொருட்டு, பிரதிமாசமும் நூறு ரூபாய் கொடுத்துவந்தனர். அவர் ஒருவருடைய திரவியசகாயத்தினால் இப்பாடசாலை நிலைபெற்று விருத்தியடைந்ததேயொழிய வேறில்லை. இம்மஹாபுருஷருடைய பெருந்தன்மையும், இவருக்குச் சுதேசிகளுடைய அபிவிருத்தியின்கண் உண்டாயிருந்த சிரத்தையையும் அளவிடக்கூடாது. இவர் இப்பாடசாலையன்றி, இந்துபாலகருக்கும், பாலிகைகளுக்கும், மற்றுஞ் சிலபாடசாலைக ளுண்டாக்கி அவைகளின் பொருட்டு மாசம் இருனூறு ரூபாயளவிலும் செலவுசெய்து வந்தனர். இவ்வாறு இவர் அன்னியதேசத்தராயிருந்தும்நமது சோதரர்களின் அபிவிருத்தியின்பொருட்டு மாதம் முன்னூறுரூபாய்வரையில் விரயஞ்செய்து வந்தாரெனில் இவரது தர்ம குணத்தைக் கொண்டாட எங்க ளால்மு

டியுமோ? இவர் இப்பாடசாலைகளின் நிலையான ஸம்ரக்ஷணையின்பொருட்டு ஸ்திரமான வரும்படி ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணங்கொண்டிருந்தாராம். ஆயினும் அவ்வெண்ணம் நிறைவேறுமற்போனதற்குக்காரணம் நமதுதௌர்பாக்கியமேயன்றி வேறல்ல. இப்புண்ணியவான்சுமார் ஒருமாதத்தியபோது அகஸ்மாத்தாய் தேகவியோகமடைந்தனர். சமாபந்தியின் பொருட்டு கிராமாந்திரங்கள் சென்று மழையிலும்வெய்யிலிலும் அடிபட்டு, மீண்டுஸ்டேஷனுக்குவருகையில்வழியில்வண்டியில்தானே களைப்பினாலேயோ மற்றெந்தகாரணத்தினாலேயோ மரித்தனர்போலும். இவர் இவ்வாறுதேகவியோகமானபடியால் இவரால்ஸ்தாபிக்கப்பட்டமேற்குறித்தபாடசாலை நிராதரவாயிருக்கின்றது. இதைக்காக்கும் பொருட்டு சென்னையிலுள்ளகனவான்கள் வேண்டியமுயற்சி செய்வார்களென நம்புகிறோம். முக்கியமாய்இப்பொழுது அப்பாடசாலையில் நூற்றிருபது பெண்கள் வாசிக்கின்றனர். இவர்களுடைய பிதாக்களும் சிநேகிதர்களும் இச்சமயத்தில் சோராமல் தங்களாலியன்ற ஸஹாயஞ்செய்வார்களென்று கோருகிறோம். வெளிஜில்லாக்களில் தருமசிந்தையுள்ள கனவான்கள் யாரேனுமிருப்பின், அவர்களுடைய தயாளத்துக் கிப்பாடசாலை முற்றும்பாத்திரமானதென்று வற்புறுத்திக்கூற சற்றும் பின்வாங்கிலோம். இதைப்போன்ற மேலான பாடசாலை ஏற்படுத்த வேண்டுமென்று பனிரெண்டுவருஷ முயன்றாலும் எளிதிற் கைகூடாதென்று நினைக்கிறோம். இஃதேதோ தெய்வானுகூலத்தால் இவ்வளவு சித்திபெற்றதென்றேநினைக்கிறோம். இதனபிவிருத்தியின்பொருட்டு மேற்குறித்த சுதேசகனவானாகிய பாபுவையர் இவ்வாறுவருஷகாலமாய் செய்துவந்த முயற்சிஇவ்வளவென்று வரையிட்டுக் கூறுவதசாத்தியம். அவருடைய அளவிறந்த பிரயாசையும் முயற்சியும், கடவுளுடையஅனுக்கிரகத்தால், சித்தியடைந்து பயனளிக்கத்தொடங்கு மிப்பருவகாலத்தில் இடிவிழுந்ததுபோல் இப்பாடசாலையின் போஷகராகிய ஹாத்வேதுரையவர்கள் இறந்துபோனது வெகுமனஸ்தாபகரமாயிருக்கின்றது. மேற்குறித்த தினத்தில் நமதன்பராகியபாபுவைய்யர் இச்சங்கதியைப்பற்றி கண்ணீர்ததும்பி பிரஸ்தாபிக்கையில் அச்சபையிலுள்ளோர்மனங்கள் மிகக்கலங்கியது. இப்பாடசாலையைஇச்சமயத்தில்காக்கும் புண்ணியமும்சந்தோஷமும் எந்த மஹாபுருஷனுக்குக்கிடைக்குமோ யாங்களறிகிலோம். தினந்தோறும்அன்னசத்திரங்கள்முதலியவற்றில் ஆயிரமொன்றாகக்கருதிசெலவுசெய்யுங் கனவான்களிருக்கின்றனர். அய்யோஇவர்கள்வித்தியாதானத்தின்உசிதத்தை அறியார்போலும். ஆகையால்அன்னமுதலியதிரவியதானங்களுக்கும்வித்தியாதானத்துக்குமுள்ளதாரதம்மியங்களைச்சற்றுவிசாரிப்போம். பலவிததானங்களுள்ளும் அன்னதானம் விசேஷமாகநம்மவர்களால்கருதப்படுகின்றது. பசித்தவருக்கன்னமிட்டுச் சந்தோஷப்படுத்துவ துசிதமாயினும், எல்லாபாவங்களுக்கும் ஹேதுவாகிய சோம்பலைப் புகட்டும் அன்னதானம் சிரேஷ்டமானதாக எமதுபுத்திக்குத்தோற்றவில்லை. அந்தந்தமஹாஸ்தலங்களில்யாதொருமுயற்சியும் பிரயாசையுமின்றி வயிர்வளர்க்கும் பலஜனங்களுடையநடையே இதற்குப்போதுமானநிதர்சனமாகும். இஃதப்படியாயினும் எல்லாதானங்களைவிட வித்தியாதானம் அதி சிரேஷ்டமென்பதைமாத்திரம் ஒருவரும் மறுக்கார்களென்று நினைக்கிறோம். வித்தையினால் இகபரசுகங்களுங் கைக்கூடலாமென்கிற ஒருகாரணமேஇதன்மேன்மையை போதுமானவரையில் விளக்குகின்றது. அன்றியும்நாம்ஒருவருக்குசெய்யக்கூடிய உபகாரங்களனைத்திலும் கல்வியேசிறந்ததும்நிலையானதும்நன்மையைப்பயக்கத்தக்கதென்பதையாவரும் எளிதில் அறிந்துகொள்ளலாம். செல்வத்தையொருவருக்குதவுங்காலதை அவர் துர்விநியோகஞ் செய்யலாம், சீக்கிரஞ் செலவழித்துவிடலாம், அல்லதுசத்துருக்கள்முதலியவற்றால் அதற்குச்சேதஞ்சம்பவிக்கலாம். கல்விப்பொருளோவெனில் என்றுமழியாமல், எவ்விதத்திலும் சேதம

டையாமல் நாளுக்குநாள்விருத்தியடைந்து அதைப்பெற்றபேருக்கும், அவர்களையுற்றோருக்கும் அளவிறந்தநன்மைகளைப் பயக்குகின்றது. ஆதலின், இவ்வளவுவுசிதமான வித்தியாதான விஷயத்தைப் பற்றி நமதன்பர்கள் சற்று தீர்க்காலோசனை செய்வார்களெனப் பிரார்த்திக்கிறோம்.

மேற்குறித்த பாடசாலையின் பொருட்டு யாதேனும் உபகாரஞ்செய்ய இஷ்டமுள்ளவர்கள், அதைப்பற்றி விசேஷமாக வறியவிரும்புமிடத்து, வேதசமாஜகாரியதரிசி யார்மூலமாயாவது, சென்னை பிரீசர்ச்சுமிஷன், அமிருதவசனிஎன்னும் பத்திரஎடிட்டரவர்கள்மூலமாயாவது அறிந்துகொள்ளலாம்.

---

## ருக்குவேதசம்ஹிதை.

## அநுவாக்ம் ரு.

௯. நராஶம் ஸம்ஸா யு்ஷ ஶெவ ஶ்ரும் ஸப்ரயஷ்தம், ஜிவொ நஸவ்ரு ஶவஸம்.

மிகவும் திண்மையானவரும், அதிசயமான புகழ்பெற்றவரும், ஸ்வர்கலோகத்தைப்போல் தேஜசுடையவருமாகிய நராசம்ஸனை * ப் பார்த்தேன். †

---

### சூக்தம், உ. (௧௯)

[ருஷியும்பாவும் முன்போல தேவதை அக்கினியும் மருத்துகளும்]

### வர்க்கம். ௬௬.

க. ப்ரதித்யஞாரு ௐஶம் மொவ வீயாய ப்ரஹுயஸெ, ஶாஹிர ஹு ஆமஹி.

ஓ அக்கினியே, (எது) அழகியதோ அந்த யக்கியத்தினிடத்து ஸோமபானத்தின்பொருட்டு அழைக்கப்படுகிறீர் (ஆகையால்) மருத்துகளுடன் கூடவாரும்,

உ. நஹிதெவொ நஶதெ்யுாஶஷ ஹுவக்ரு தம் வரஃ, ஶாஹிர ஹு ஆமஹி.

பெரியவரோ, உமக்குரியகருமத்தை (மீறத்) தேவனும் சிறந்தவனல்லன்: மனிதனுமல்லன். அக்கினியே, மருத்துகளுடன்வாரும்.

௩. யெஶஹொரஜஸொவிஃவிஃ ஶ்வெதெவாஸொ அத்ருஹஃ, ஶாஹிர ஹு ஆமஹி.

அக்கினியே, எவர்கள் மஹத்தான ஜலத்தை (வர்ஷிக்கும்வகை) அறிகிறார்களோ, எவர்கள் எல்லாரும் * பிரகாசமானவர்களோ (அப்பேர்ப்பட்ட) மருத்துகளுடன் வாரும்.

௪. யஉக்ராஅகுஶ ஶாநுஷும்ஶநா யுஷாஸஜஸா, ஶாஹிர ஹுஆமஹி.

அக்கினியே, எவர்கள் தீவிரமானவர்களாய், நீரை † வழங்குகிறவர்களோ, வலிமையால் திரஸ்கரிக்கப் படாதவர்களோ (அப்பேர்ப்பட்ட) மருத்துகளுடன் வாரும்.

---

* இப்பதத்தை ௧௩-ம்சூக்தத்து ௩-ம் ருக்கின்படி அக்கினிரூபத்தைக்குறிக்கின்றதாயாவது, அல்லது ‘மனிதரால் புகழப்படுவோன்’ என்னும் அதன் இயல்பான பொருளில் வந்து ஸதஸஸ்பதியைக் குறிக்கிறதாயாவது கொள்ளலாமென்று உரையில் கூறியிருக்கிறது.

† “சாஸ்திரதிருஷ்டியால் பார்த்தேன்!” என உரை.

* விஶ்வ இதற்கு “ஸப்தமனா வெஶ தஃ மருத்துகள் எழுகூட்டத்தாரோ” என்றும் சுருதியின் ஆதாரத்தால் ‘எழுகூட்டத்தாரும்’ என வுரையில் சொல்லப்பட்டிருக்கிறது.

† அகஶ=பருதி, அகஶ, ஹிரண்ணியகர்ப்பனவன்பூமியைப்படைத்தபின் நீரையுண்டு பண்ணக்கருதி அர்ச்சித்துக்கொண்டு சஞ்சரித்தபோது அவ்வர்ச்சையால் ஜலம் உண்டானபடியால் அதற்கு அகஶ என்று பேர்வந்ததாக சொல்லியிருக்கிறது.

௫. யே ஶுப்ரா கோரவர்பஸஃ ஸுக்ஷத்ராஸோ ரிஶாதஸஃ, மருத்பிரக்ந ஆ கஹி.

அக்கினியே, எவர்கள் அழிகியவர்களோ * உக்கிரமானரூபமுடையவர்களோ நன்றான பொருளுடையவர்களோ, ஹிம்ஸகர்களைத் தின்றுவிடுகிறவர்களோ அப்பேர்ப்பட்ட மருத்துகளுடன் வாரும்.

வர்க்கம் ௧௭.

௬. யே நாகஸ்யாதி ரோசநே திவி தேவாஸ ஆஸதே, மருத்பிரக்ந ஆ கஹி.

அக்கினியே, எவர்கள் சூரியனின் மேலாக † பிரகாசமான திவ்வியலோகத்தில் ஒளிபொருந்தியவைகளாய் இருக்கின்றனரோ (அந்த) மருத்துக்களுடன் வாரும்.

௭. ய ஈங்கயந்தி பர்வதாந் திரஃ ஸமுத்ரமர்ணவம், மருத்பிரக்ந ஆ கஹி.

அக்கினியே எவர்கள் மேகங்களை நடத்துகிறார்களோ, நீர்தங்கியகடலை அலைக்கிறார்களோ (அந்த) மருத்துக்களுடன் வாரும்.

௮. ஆ யே தந்வந்தி ரஶ்மிபிஸ் திரஃ ஸமுத்ரமோஜஸா, மருத்பிரக்ந ஆ கஹி.

அக்கினியே, எவர்கள் (சூரிய) கிரணங்களுடன் (வானத்தை) வியாபிக்கிறார்களோ (தங்கள்) பலத்தால் கடலைப்புரட்டுகிறார்களோ (அப்பேர்ப்பட்ட) மருத்துக்களுடன்வாரும்.

௯. அபி த்வா பூர்வபீதயே ஸ்ருஜாமி ஸோம்யம் மது, மருத்பிரக்ந ஆ கஹி.

ஓ அக்கினியே, உமக்காக பூர்வபானத்தின்பொருட்டு ஸோமஸம்பந்தமானமதுவை ¶ வார்க்கிறேன் மருத்துக்களுடன் வாரும்.

---

* ஶுப்ராஃ, சகஜமாய் 'வெள்ளையானவர்கள்' என்று பொருளாம்.

† நாகஸ்ய, சகஜமாய் 'வானத்தின்' என்று பொருளாம், கம்=சுகம்; சுகமற்றவன் அகஃ அப்படியல்லன் நாகஃ என வியுத்பத்தி சொல்லப்பட்டிருக்கிறது.

## தைத்தரீய உபநிஷத்.

(தொடர்ச்சி.)

சவது - அநுவாகம்.

(மொழிபெயர்ப்பு)

௧. எவனால் வேதங்களுக் கெல்லாம் முதன்மையானவனும் * (ஆதியாகிய ஓங்காரஸ்வரூபனும்)விசுவரூபனுமாகவிருக்கின்றானோ, † —நித்தியமாகிய ‡ வேதத்தைக் காட்டிலும் நித்தியமானவனுமாக இருக்கின்றானோ, அப்பேர்க்கொத்த (ஸர்வசிரேஷ்டனும் ஓம்காரரூபனுமாகிய) இந்திரன் என்னை மேதையோடு(புத்தி, ஞானம்) பலப்படுத்துவானாக. § —ஓதேவனே! (யான்) அமிருதத்துக்கு(மோக்ஷத்துக்கு க்காரணமாகிய பிரம்மக்கியானத்தை)தரிப்பவனாவேனாக. என்னுடையசரீரம் சக்தியடையக்கடவதாக,—என்னுடையநாக்கு மதுரமாக(மதுரமானசம்பாஷணைச்செய்ய)க்கடவதாக,—(நான் என்னுடைய செவிகளால்அதிகமாகக்கேட்பேனாக.—(ஓம்காரமாகியநீ)மேதையால்மூடப்பட்டபிரம்மத்தின்கோசம்(உறை = கூடு)ஆகின்றாய். —நான்கேட்டதை (பிரம்மக்கியானத்தை)காப்பாத்துவாயாக. —விருத்திசெய்கிறதும் கொண்டுவருகின்றதுமாக.—

---

¶ 'மதுரமான பாகத்தை, என உரைசெய்யப்பட்டிருக்கின்றது.

* என்றால் வேதங்களுக்கெல்லாம் பிரதானமாயும்=ஆதிகாரணமாயும், ஸர்வசிரேஷ்டமாயுமிருக்கும் ஓங்கார ஸ்வரூபமாகிய பரப்பிரம்மம்என பாஷியகாரர்கள் உரையுரைத்திருக்கின்றனர்.

† பிரகிருதிரூபமானவும் உலகத்தை எல்லாம் அடக்கிக்கொண்ட ஸ்வரூபமான.

‡ நாசமற்ற.

§ ஸந்தோஷப்படுத்துவானாகவென்பதும் இதின்பொருளாம்.

௨. எனக்குஎப்பொழுதும்செய்வதாக,—(என்னவெனில்)எனக்கு வஸ்திரங்களையும்பசுக்களையும்,—எப்பொழுதும் அன்னபானத்துடனும்,—(இரக்ஷிப்பதாக.)எனக்குபுத்தியளித்தபிறகு (முன்சொல்லிய வஸ்திரம் முதலியத்தைச்செய்யும்) ஸ்ரீயை அதிகலோமங்களுடைய ஆடுகளையும் பசுக்கள் முதலியத்துடன் கொண்டுவருவாயாக, ஸ்வாஹா!—பிரம்மசாரிகள் என்னை அடைவார்களாக.

௩. இச்சனஸமூகத்தில் நான் யசஸ்ஸுடையவனாக இருப்பேனாக, ஸ்வாஹா! —வஸுமத் (ஸம்பத்துடையோர்) துகளுக்கெல்லாம் (நான் வஸுமத் (ஸம்பத்துடைய)உடையவனாக இருப்பேனாக, —ஸ்வாஹா!—ஓபூஜிக்கத்தக்க பகவானே!

(பிரம்மத்துக்குக் கோசமாயும் ஓங்காரஸ்வரூபமாயுமிருக்கும்பகவானே) நின்னையேபிரவேசிப்பேனாக, ஸ்வாஹா!—ஓபூஜியனான பகவானே! (நீ,என்னைப்பிரவேசிப்பாயாக, ஸ்வாஹா! * —ஸஹஸ்ரக்கிளையாகப் பரவுகின்ற (உன்னிடத்தில்,)ஓபூச்சியனான பகவானே! என்பாபகிருத்தியங்களைப் போக்கடித்துக் கொள்வேனாக, ஸ்வாஹா! —(உலகத்தில்) ஜலம் பள்ளத்தில் செல்லுவதுபோலும், மாதங்கள்தினஸமூஹ (மானஸம்வத்ஸர)த்தைச் செல்லுவதுபோலும், —இவ்வாறு, ஓ ஸ்ருஷ்டிகர்த்தனே! பிரம்மசாரிகள் என்னைஎங்கு மடையக் கடவார்களாக, ஸ்வாஹ! —(இப்படிக்கு நீ)சரண் ஆகின்றாய்; (நீ) என்னைப்பிரகாசப் படுத்துவா(தெளிவிப்பா)யாக. என்னை உன்னிட (ஆத்மத்தில்) சேர்த்துக்கொள்வாயாக.

(இதின்பொருள்—ஸம்பத்தால் தர்மமும், தர்மத்தால்பாபநாசமும், பாபநாசத்தால்வித்தையு(பிரம்மக்கியான)முண்டாகுமென்றும், அவ்வித்தைப் பாபிகளுக்குப் புலப்படாதென்றும், பாபமற்றவர்களுக் குண்டாகுமென்பதுமேயாம். இந்த அர்த்தத்துக்கு அநுகுண ஸ்மிருதிவாக்கியமொன்று கூறப்படுகின்றது.—)

"ஞானமுத்பத்யதே பும்ஸாம் க்ஷ
"யாத்பாபஸ்ய கர்மண:. புமான்களுக்கு
"பாபகர்மம் தொலைந்தபிறகு கியானமுண்
"டாகின்றது."எனபாஷியமுரைத்திருக்கின்றது.

---

* என்றால் நம்மிருவருக்கும் ஐகமத்தியமுண்டாவதாகஎன்று பாஷியத்தில் உரைசெய்திருக்கின்றது.

# பேகன்வியாசம்

## நாஸ்திக்கியத்தைப்பற்றியது.

(தொடர்ச்சி.)

சமயங்களின்கணுளபலபிரிவுகளேநாஸ்திக்கியத்துக்குக் காரணம். ஏனெனில் யாதாமொருமுக்கியபிரிவானது இருகக்ஷிகளுக்கும்வைராக்கியமதிகப்படுத்தினபோதிலும்,பலகக்ஷிபேதங்கள்நாஸ்திகத்தைப்புகட்டுகின்றன. "ஆசாரியர்கள் வர்திப்பதுபோல் ஜனங்கள் வர்தியாமையால் ஜனங்களைப் போலவே ஆசாரியனும். என்று இக்காலத்தில் சொல்லொணாதென" செயிண்டுபர்னார்டு என்போர் உரைத்திருப்பதற்கொப்பாகிய ஸ்திதியில் சமையா சாரி களடையும் அபக்கியாதி,(நாஸ்திக்கியத்துக்கு)மற்றொருகாரணம். வைதிகவிஷயங்களை அசிரத்தையோடும் பரிகாசஞ் செய்யும் வழக்கம் மூன்றாவது காரணம். இது மதத்தின்கணுண்டா யிருக்கும் பக்தியைக்கொஞ்சம்கொஞ்சமாகக் குறைத்து விடுகின்றது. கடைசியில் செழிப்போடும் அமைதியோடுங் கூடி கல்வி பெருகும் காலமும் ஓர்காரணமே. ஏனெனில் தொல்லையும் துன்பமும் மனிதருடைய மனங்களைச் சமயத்துக்கு விசேஷமாக பணியும்படிச் செய்கின்றன.

கடவுளில்லையென்றும்றுப்போர் மனிதனுடையமேன்மையைஅழித்தவாரகின்றனர்.ஏனென்றால் மனிதன் தன்சரீரத்தால்மிருகங்களுக்கினத்தோனாகின்றான்.தனதான்மாவினால்கடவுளின்இனத்தோனாகாவிடில் அவன்தாழ்ந்தநீசத்துவமுடையஜந்துவாகின்றான். அவ்வாறே அஃது பெருந்தன்மையையும்விருத்தியடையத்தக்க மனிதஸ்வபாவத்தையும் அழித்துவிடுகின்றது. ஏனெனில் ஒருநாயை திருஷ்டாந்தமாகக் கொள்ளுவோம். இது, தனக்குக்கடவுளாக வமைந்திருக்கும், அல்லது தன்னிலும் மேம்பாட்டுடைய தன்மையுடையமனிதனால், ஸம்ரக்ஷணைசெய்யப்படுவதைக்காணுங்கால் எவ்வளவுதயாளமும்தைரியமும் வெளியிடுகின்றதென்பதைக் குறிப்போமாக. தன்னிலும் மேலான தன்மையுள்ளமனிதனிடத்து இதற்குள்ள விசுவாஸமின்றி இது அவ்வளவு தைரிய மடையமாட்டாதென்பது எளிதில் விசிதமாகும். அவ்வாறே மனிதனும் தெய்வகடாக்ஷத்தையும், ரக்ஷண்ணியத்தையும் கோரி நம்புவானாகில் தன்ஸ்வபாவத்தினாலேயே அடையக்கூடாத பக்தியையும் வன்மையும் அடைகின்றனன். ஆகையால் நாஸ்திகமதம் மற்றவிஷயங்களில் வெறுக்கத்தக்கதா யிருப்பதுபோலவே, மனிதரையுற்ற தாழ்வினின்றும் குறையினி

ன்றும், மனிதஸ்வபாவத்தை, மேன்மை யடையச்செய்யும் கருவியைநீக்குகிற தென்பதினாலும், மிகவெறுக்கத்தக்கதாயிருக்கின்றது. இஃதுஒவ்வொருமனிதன்விஷயத்திலெப்படியோ அப்படியே தேசங்களின்விஷயத்திலும். ரோமகராஜியத்தைப்போல்அவ்வளவுபெருந்தன்மையுள்ளராஜியமிருந்ததில்லை. இந்தசமஸ்தானத்தைப்பற்றி ஸிஸரோஎன்பவர்சொல்லியதாவது. "இராஜியத்தைப்பரிக்கும் பெரியோர்களே! நாம்எவ்வளவு ஸ்வயாபிமான முள்ளவராயினும், இஸ்பாநியர்களைப்பார்க்கிலும், எண்ணில் மிகுந்தோரன்று; பலத்தில் காலியர்களைப்பார்க்கிலும் அதிகரித்தோமில்லை; தந்திரத்தில் கார்தஜீனியர்களையும், வித்தையில், கார்க்கியர்களையும் வென்றோமில்லை; நமது சொந்த கிருககிருத்தியங்களைநடத்தும் ஸ்வபாவமான அறிவில், இந்நாட்டிலுள்ளஇலத்தின்களையும்இடாலியர்களையும் மேற்பட்டவரன்று. ஆயினும், தெய்வபக்தியிலும் வைதிகவிஷயங்களிலும், எத்தேசத்தாரிலும், எஜ்ஜனங்களிலும், மேன்மையுற் றிருக்கின்றோம். அமிருதராகிய தேவர்களுடைய வன்மையின் ஆளுகைக்கும் ஆக்கினைக்கும் சகலமும் உட்பட்டிருக்கின்றனவென்று பூர்த்தியாயறியும் ஞானத்தில்சிறந்தவர்களாயிருக்கின்றோம்."

---

## மநுநூல்.

## மொழிபெயர்ப்பு.

(தொடர்ச்சி.)

### ௨ம் - அத்தியாயம்.

(௧௮௧) எவ்வகை த்விஜ பிரம்மசாரியும் ஸ்வப்பனத்தில் தன் ரேதஸ் தற்சயலாய் நழுவினால் ஸ்நானம்செய்து சூரியனை பூஜித்து, [illegible] யம்,' மருபடியும் என்னுடைய ரேதஸ் என்னை அடையக்கடவதாக" என்னும்ருக்கை (ஸூக்தத்தை) மும்மடங்கு ஜபிக்கக்கடவன்.

(௧௮௨) (எவ்வகை த்விஜ பிரம்மசாரியும்) ஜலகும்பம், புஷ்பம், பசுசாணி, பரிசுத்தமண் தர்பை, முதலியவற்றை தினந்தோறும் ஆசாரியனுக்கு பிரயோஜனமுள்ளளவும் கொண்டுவரக்கடவன். மேலுமவன் தினந்தோறும் பிக்ஷைசெய்யக்கடவன்.

(௧௮௩) பிரம்மசாரியானவன், வேதம் நன்றாய் (கற்றுணர்ந்து) யக்கியம்(செய்து) நல்லொழுக்கத்தினின்றும் தவிராமலிருக்கும் த்விஜார்களின் வீட்டில் பரிசுத்தனாய் பிக்ஷைஎடுத்து நாடோறும் அன்னம் சம்பாதிக்கவேண்டியது.

(௧௮௪) (பிரம்மசாரியானவன்) ஆசாரியனுடைய குலத்திலும், கியாதிகளின்குலத்திலும், மற்ற பந்துக்களின் (என்றால் தாய் தந்தைகளின் வழியான மாமன்மார்கள் முதலியவர்களின்) வீட்டிலும் பிக்ஷைசெய்யத் தகாதவனாகின்றான். மற்றெந்தவீடுகளிலும் பிக்ஷை அகப்படாவிடின், அவன் மேற்கூறிய வரிசையில் கடசியினின்று கிரமமாய்(முதலாகிய ஆசாரியன் வீடன்றி) பிக்ஷை எடுக்கக்கடவான்.

(௧௮௫) மேற்கூறிய (நல்லொழுக்க முடைய) வர்களின் வீடுகளில் (பிக்ஷை) அகப்படாவிடில், மஹாபாதகம்செய்தவர்கள் வீடுதவிர மற்ற அருகிலிருக்கும் ஸகல கிராமங்களுக்கும் சென்று, இந்திரியநிக்கிரஹ முடையவனாய் மவுனத்துடன் (பிரம்மசாரி) பிக்ஷை எடுக்கக்கடவான்.

(௧௮௬) பிரம்மசாரியானவன் வெகுதூரத்தினின்றும் ஸமித்துக்களைக் கொண்டுவந்து அவைகளை மேலானவிடத்தில் வைக்கக்கடவான். பின்னுமவன்சோம்பலின்றிக் காலையிலும் மாலையிலும் அவைகளால் அக்னியில் ஹோமம் செய்யக்கடவான்.

(௧௮௭) எவனானால் (பிரம்மசாரி) ரோகமில்லாமலிருக்கும்பொழுது வரிசையாய் ஏழுநாள் பிக்ஷை எடுக்காமலும், அக்னியில் ஹோமம்செய்யாமலு மிருக்கின்றானோ அவன் அவகீரணியின் விருதத்தைச் செய்யவேண்டும்.

(௧௮௮.) பிரம்மசாரி யானவன் தினந்தோறும் பிக்ஷையினால் ஜீவனம் செய்யக்கடவான்; ஆனாலவன் ஒருவனுடைய அன்னத்தையே பக்ஷிக்கத்தகாதவனாவான். பிரம்மசாரிக்குபிக்ஷையால் செய்யும்விருத்தியானது (தொழிலானது விருதாதி) உபவாசத்துக்குச் சமமாகின்றது.

(௧௮௯.) (அப்பிரம்மசாரியானவன்) தேவகர்மத்திலாகிலும், பிதிருகர்மத்திலாகிலும், வரிக்கப்படுவானாகில் அவனிஷ்டப்படி ஒருமனிதனுடைய ஆஹாரத்தை புஜிக்கலாம், அப்படிபுஜிப்பதில் யதி (ஸன்னியாசி)யினுடைய விருதத்தைக் கவனிக்கவேண்டும். இவ்வாறுசெய்வதில் அவனுடையவிருதம் பங்கப்பட்டதாகிரதில்லை.

(௧௯௦.) இவ்வாரு மேற்கூறிய பிக்ஷையாகிற கர்மங்கள் பிராம்மணனுக்காக புத்தியுடையோரால் உபதேசிக்கப் பட்டதேயன்றி, இவ்வகை பிக்ஷைத்தொழில் க்ஷத்திரிய

னுக்காவது வைசியனுக்காவது விதிக்கப்படவில்லை.

(ககூக.) வித்தியார்த்தியாகியசிஷியனானவன் ஆசாரியனால் ஆக்கியாபிக்கப் படினும், படாவிடினும், அத்தியயனத்திலும், ஆசாரியனுக்கு ஹிதமாகிய எவ்வகைத்தொழிலிலும் (தினந்தோறும்) பிரயத்தினம் செய்யக்கடவான்.

(ககூஉ.) சிஷியனானவன் தன்னுடை சரீரம், வாக்கு, புத்தி, இந்திரியம் இவைகளின் அடக்கமுடையவனாயும், கைகளை அஞ்சலிசெய்துக்கொண்டும், அவனுக்கு முன்பாக நிர்க்கக்கடவான்.

(ககூ௩.) நித்தியமாகசிஷியனானவன் வலக்கைய்யை உயரமாக எடுத்துக் கொண்டும், எப்பொழுதும்(தனக்கு யோக்கியமான) வஸ்திரங்களணிந்தவனாயும், அடக்கமுடையவனாயும நல்லொழுக்கமுடையவனாயுமிருந்து 'உட்கார்'என்று ஆசாரியன் சொன்ன் பிறகு அவனுக்கெதிர்முகமாக உட்காரக்கடவா்ன்.

(ககூச.) சிஷியனானவன் ஆசாரியனுக்கு முன்பாககொஞ்சமாகபுஜித்துக்கொண்டும், அல்பவஸ்திரம் அல்பவேஷமுடைபவனாயுமிருக்கக்கடவன்.பின்னுமவன் தினநதோறும்படுக்கையிலிருந்து ஆசாரியனுக்குமுன்னெழுநது பின்படுப்பவனுமாக இருக்கக்சடவான்.

(ககூரு.) சிஷியனானவன்தன்னுடையஆசாரியன்ஆஜ்ஞைக்கு உத்தரமளிக்கும்பொழுதும், தானாய்பேசும்பொழுதும், படுக்கையிலிருந்துகெண்டாகிலும், உட்கார்ந்து கொண்டாகிலும், சாப்பிட்டுக்கொண்டாகிலும்; நின்றுக்கொண்டாகிலும்,விமுகனாயும் (என்றால்எதிர்முகமாகாமலும்) உத்தரமளிக்காதவனாவான்.

(ககூ௬.) சிஷியனானவன் ஆசாரியன் உட்கார்ந்திருந்தால் நின்றுக்கொண்டும், நின்றுக்கொண்டிருந்தால் ஸமீபித்தும், வந்துக்கொண்டிருந்தால் எதிரேசென்றும், வேகமாய் போயிக்கொண்டிருந்தால் பின்னேஓடியும் (உத்தரமளிக்கததக்கவனும், ஸம்பாஷணை செய்யத்தக்கவனுமாவான்.)

(ககூஎ. சிஷியனானவன் ஆசாரியனுடையமுகம் வேறுபக்கத்தில் திருப்பப்பட்டிருந்தால் இடைப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாய் அவனுக்கு முன்புறத்தில்போயும், அவன் கொஞ்சதூரத்திலிருந்தால் அவனருகில்சென்றும், அவன் குனிந்துக்கொண்டிருந்தால் தான்மிகவும் வணங்கிக்கொண்டும், அவன் வெகுதூரத்திலிருந்தால் எதிராகச் சென்றும், (ஆசாரியன்வினாவுக்கும், தானாய்பேசும் பொழுதும்,உத்தரமளிக்கத்தக்கவனாவான்.)

(ககூஅ.) எப்பொழுது ஆசாரியன்ஸமீபமாயிருக்கின்றானோ அப்பொழுதுஇவனுடைய (சிஷியனுடைய)ஆஸனமும், படுக்கையும், மிகவும் தாழ்ந்ததாக விருக்கவேண்டும். ஆசாரியன்கண்சிஷியனைப்பார்க்கும்பொழுது சிஷியன் அஜாக்கிரதையாயும் சோம்பலாயுமிருக்கக்கூடாது.

(ககூகூ.) சிஷியனானவன் ஒருபொழுதும் ஆசாரியனுடைய பரோக்ஷத்திலும் அவன்நாமத்தைக்கூடஉச்சரிக்கத்தகாதவன்; அல்லது ஆசாரியனுடைய நடையையாகிலும், ஸம்பாஷணத்தையாகிலும், மாதிரியை யாகிலும் பரிஹாஸிக்கத் தகாதவனாவான்.

(உ00.) எந்தவிடத்திலாகிலும் ஆசாரியனுடைய பரிவாதம் (என்றால் உள்ளதோஷத்தைச் சொல்லுதல்) நிந்தை (என்றால் இல்லாத தோஷத்தைச் சொல்லுதல்) இவ்விரண்டும் நடந்தால், சிஷியன் காதையாவது மூடிக்கொள்ளக்கடவான்; அவ்விடத்தையாகிலும் விட்டுவிடக்கடவான்.

---

## நிருபம்.

ம - ா - ா. தத்துவபோதினி கர்த்தாவர்கட்கு வந்தனம்,

ஐயா

இவ்வுடுமலைப்பேட்டை வேதசமாஜம் நாளுக்குநாள் விருத்தியடைந்துவருவதற்காக இவ்விடத்திலுள்ளயாவரும் மிகுந்த சந்துஷ்டி யடைந்திருக்கிறார்கள்.

இந்தஸமாஜம் வழக்கப்படிக்கு நாளது ஸ்ரீ - கூஉ ஞாயிற்றுக்கிழமை பகல் ௪ - மணிமுதல் இராத்திரி - எ. மணிவரையிற் சபை கூடப்பட்டது.

அப்பொழுது சென்ற ௲அகூச௵ - த்திய நவம்பர்மாதத்தின் தத்துவபோதினியின் கருத்துக்களைவாசிக்க எல்லோரும் நன்றாய்க்கவனித்தார்கள். அச்சபைக்கு வந்திருந்த கோயமுத்தூர்ஜில்லாக் கோரட்டுப்பிளீடர் குப்புசாமிஐயரென்பவர் விக்கிரகஆராதனத்தைப் பூர்வபட்சம்ஆக்கி வெளியிட்ட உபநியாசம் பிரயோஜனமுள்ளதா யிருப்பதினாலே அவர்செய்தபடி யிந்த உபந்நியாசத்தையிதனடியில் வரைகிறேன். அதை நம்மவர்களெல்லோரும் அறியும்பொருட்டுத் த

ங்கள் பத்திரிகையில் பிரசுரப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அஃதாவது.

சோதரர்களே!

சென்னைப்பட்டணம் வேதசமாஜத்தாருடைய உத்தேசங்களிலொன்றாகிய விக்கிரகஆராதனத்தைப்பற்றி யென்னுடைய நம்பிக்கையை யிச்சபையில் பிரசங்கிக்க நான் சந்தோஷமுள்ளவனா யிருக்கிறேன்.

இதனாலிச்சபையாருக்குத் தெரியாதஅபிப்பிராயங்களை யான்எடுத்துரைக்கிறேனென்பதல்ல; உண்மை வெளியாகவேண்டுமென்பதே யென்கோரிக்கையாகையால் என்னுடைய கொள்கையைப்பற்றி யுங்களுடைய அபிப்பிராயத்தை நான் தெரிந்துகொள்வதில் எனக்கு நல்லபிரயோசனமுண்டு.

முதலில் நான்சபையாரைக் கேட்டுக்கொள்வதெல்லாங்கூடி என்னிடத்திலுள்ள சொல்வழுக்களைக் கவனியாமலிருக்கவேண்டுமென்பதேயாம்.

சகலத்தையும் படைத்தக்கடவுள் ஒருவர்தான் என்பதில் எனக்கு அணுவளவும் சந்தேகம் தோற்றவில்லை.

அவரைப்பற்றி யோசிக்கவேண்டிய விஷயங்கள் மூன்றுண்டு.

அவைகளில் முதலாவது.

அவருக்குநாமரூபங்களுண்டா?

இரண்டாவது, அவருக்கு நாமரூபங்களுண்டென்று நம்பி அர்ச்சையினால் அவரை ஆராதிக்கக்கூடுமா?

மூன்றாவது, அவர்விஷயத்தில் நாம்நடந்துகொள்ளவேண்டியகடமையென்ன?

இவைகளில் முதலாவது இரண்டாவது விஷயங்களை முதலில் பிரஸ்தாபிக்கிறேன்.

ஏகநாயகராகியகடவுள் சர்வசக்தியுள்ளவராயிருக்கிறார். அவரைபரப்பிரும்மமென்றும்மேலான இருத்தலென்றும் மாத்திரஞ்சொல்லக்கூடும். அவருக்கு நாமரூபமில்லை. இவ்வளவு துணிவு எனக்குண்டாக எனது சொந்த அபிப்பிராயங் காரணமல்ல. உத்கிருஷ்டமானவை யென்று நம்மால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற வேதங்களே அப்படிக்கு முறையிடுகின்றன. சதுர்வேதங்களாகிய இந்தச்சுருதிப் பிரமாணங்கள் ஒருவரால் உண்டாக்கப்பட்டதல்ல; அவைகள் காதினால்கேட்டு அறிந்தவைகளாகையால் அவைகட்குச் சுருதிகளென்று பெயர்வந்தது. இந்தவேதங்களினால் வெளியிடப் பட்டிருக்கிற அபிப்பிராயங்களைக் கவனித்து நடக்கவேண்டியதுதான் நமது முக்கியகடமை. கடவுளுடைய நிலையைப்பற்றிச் சிலஉபநிஷத்துக்களையெடுத்துச் சொல்கிறேன். சுவேதாசுவதர உபநிஷத்து மூன்றாம்அத்தியாயம் - ௧௦ வதுவாக்கியம் "ததோ யதுத்தரதரம் ததரூபமநாமயம், ய ஏதத்விதுரம்ருதாஸ்தே பவந்த்யதேதரே துக்கமேவாபியந்தி."

இதன்பொருள் அவனை "ச்சிறந்த திலெல்லாம் சிறந்தவனென்றும் ரூபமும்துன்பமுமற்றவனென்றும்யாரறிகிறார்களோ அவர்களுக்கு அமிருதத்துவங்கிடைக்குமென்றும், இதரர்களுக்கோவெனில் துன்பமே கிடைக்குமென்பதேயாம்."

சுருதிவசனங்களின் மூலங்களை யெடுத்துச்சொல்ல இப்போது காலஅவகாசம் போராதாகையால் அர்த்தங்களைமாத்திரஞ் சொல்லுகிறேன்.

மேற்படி ௬-வதுஅத்தியாயம்-௧௧-௧௨-வதுவாக்கியங்கள்-சகலபூதங்களிலும் மறைந்தும்சர்வவியாபியாயும் சர்வபூதங்களுக்கும் அந்தராத்மாவாகவும் தொழில்களுக்கிறைவனாகவும் சர்வபூதங்களிலும் உறைந்துகொண்டும் சாட்சியாகவும் கேவலம் சேதனசுவரூபியாகவும் குணங்களற்றும் தொழிலற்றபலவற்றிலும் தனிமையான வாசியாகவும் ஒருவித்தைப் பலவகை யாக்குவோனாகவும் உள்ளஒருவனே தேவன். அவனைத்தங்களுக்குள்ளிருப்பதாய்க் காணும் தீரர்கள்மாத்திரம் நிலைத்தசுகமடைவார்களேயன்றி மற்றவர்களடையார்கள்.

முண்டகோபநிஷத்தில் பிரதம முண்டகம் முதலாவது அத்தியாயம், ௬ - வது வாக்கியம் "அதுபிரம்மம், அதிருசியம், கிரகிக்கக்கூடாதது. அடியற்றது, வர்ணமற்றது, கண்காலில்லாதது, கைகாதில்லாதது, நித்தியமானது, விபுசுவரூபி, எங்கும்பரவியது, சூட்சுமமானது, அவியயமானது, அதைத்தீரர்கள் பூதங்களுக்கெல்லாம்ஆதிகாரணமென்று நன்றாயறிவார்கள்."

ஷை துவிதியமுண்டகம் இரண்டாம்அத்தியாயம் எ-வதுவாக்கியம் "விவேகபூரணனும்

திவ்வியமான பிரம்மபுரமெங்கும் பரவியிருக்கும்மகிமையுள்ளவனும், ஆகிய ஆத்துமா ஆகாசத்திலிருக்கிறான். அவன் மனோமயமானவன்."அன்னத்தின்மேல்சார்ந்திருக்கும்பிராணனுக்கும் தேகத்துக்கும் கட்டளையிடுவோன். சுவேதாசுவதர உபநிஷத்து முதல் அத்தியாயம், ௧௯-வது வாக்கியத்தில்"அவன் பிரம்மம், கையின்றிக் கிரகிக்கிறான், காலின்றிநடக்கிறான், கண்ணின்றிக்காண்கிறான், காதின்றிக்கேட்கிறான், அறியத்தக்கனவெல்லாம் அவனறிவான், அவனையோ அறிந்தவரில்லை. அவனுக்கு வேறுலட்சணமொன்றுஞ் சொல்லக்கூடாமையால் அவனை ஆதிமகாபுருஷனென்கிறார்கள்".

௸ ௪-வது அத்தியாயம் - ௧௯-வது ௨0-வது வாக்கியங்களில், " அவன்உயரத்தையாவது அகலத்தையாவதுஇடையையாவது ஒருவருங்கண்டறியார்.மகாயசஸ் என்னும்பெயரையுடையஅவருக்குப்பிரதிமையேயில்லை."

கடோபநிஷத்து மூன்றும்வல்லி-௧௨-வது வாக்கியத்தில்"சர்வபூதங்களிலும்கூடமான ஆத்மாவாக விருக்கும் இவன்கண்ணுக்கு விளங்குகிறதில்லை. நுண்ணறிவுடையவர்களுடையகவனமுள்ள நுண்ணறிவுக்குமாத்திரம்விளங்குவான்." இப்படிக்கு அனேகபிரமாணங்களிருக்கின்றன.இவைகட்குவிரோதமாய்ச்சிலர்சொல்லநான்கேட்டிருக்கிறேன்.

அஃதாவது-வேதங்களனந்தம், அதிற் சிலது மறைந்துபோய்விட்டது.அப்படிமறைந்துபோனபாகத்தில் கடவுளுக்கு நாமரூபமுண்டென்பதற்கும் அர்ச்சையினாலவரையாராதிப்பதற்கும் பிரமாணமிருக்கலாமென்று அவர்கள் துர்வாதஞ் செய்கிறார்கள். அவர்களுடைய இந்தக்கட்சி யுபயோகமற்றது. ஏனென்றால் வேதங்களில் பரஸ்பரவிரோத மிருக்குமென்பதை நிமிஷமாவது நம்பக்கூடாது. அப்படிக்குக்கொள்வோமாகில் வேதங்கட்கு மகிமையேயில்லையென்று கெட்டியாய்ச்சொல்லலாம். அப்படிச்சொல்ல நமக்குத் துணிவில்லையாகையால் வேதங்களில் பரஸ்பரவிரோதமிராதென்பது நிச்சயம்.அர்சசைக்கு வேதங்களில் பிரமாணமில்லாவிடினும் வேறுகிரந்தங்களிலாவது சொல்லியிருக்கவில்லையாவென்று சிலர் கேள்க்கலாம். வேதங்களல்லாமல் ஸ்மிருதி புராண இதிஹாஸமென்கிற மூன்றுவகுப்புள்ள கிரந்தங்களுண்டு; அம்மூன்றில்சிரேஷ்டமானதுஸ்மிருதிதான். இதைமனதினால் ஸ்மரிக்கப்பட்ட படியால் அதற்குஸ்மிருதியென்று பெயர்வந்தது. மற்ற இரண்டுவகை கிரந்தங்களும் ஸ்மிருதிக்குத்தாழ்ந்தவைகள். இந்தமூன்றுவகைக்கிரந்தங்களும் உண்டாக்கப்பட்ட வைகளாகையால்அவைகட்குவேதங்களுக்குள்ள மஹிமையில்லை. ஆனாலிந்தக் கிரந்தங்களில்சொல்லப்படுகிறவிஷயம் வேதார்த்தங்கட்கு ஒத்திருக்கிறவரை கிராகியமென்றும் வேதத்துக்கு விருத்தமான பாகங்கள்அக்கிராகியமென்றும்சான்றோருரைத்திருக்கிறார்கள்.வேதத்திற்குவிரோதமாயிருக் கிறகிரந்தங்களில் அர்ச்சைக்குப்பிரமாணமிருக்கிறது. வேதத்தைப் பகைத்துக்கொண்டு அப்படிக்குக்கிரந்தங்களேற்படநியாயமுண்டு.அதைச்சற்றுக்கேட்கவேண்டும். ஆதியிற்சாதிபேதமின்றி மனுஷியாள்யாவரும் மிருகப்பிராயமாகவேயிருந்தார்கள். நாளாவட்டதில்அவர்களில்சிலருக்குஅறிவுவிள்க்கமுண்டாச்சுது.பின்புகடவுளதுகிருபையினால், அவர்கட்கு வேதங்கள் கிடைத்து,அவைகளைச் சோதிக்கவகையுமேற்பட்டது.

அவர்களுடைய சோதனையினாலும் அநுபவத்தாலும் பிரபஞ்சத்தைப் படைத்த கடவுள் ஒருவருண்டென்று அனுமான உத்தேசமுண்டாய்அவர்விஷயத்தில் ஜனங்கள் நடந்துகொள்ளவேண்டிய கடமையைப்பற்றிச்சிலவேற்பாடுகள்செய்தார்கள். அவை யாவன-ஜனங்கள்,பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களென்கி நான்கு ஜாதிகளாகப்பிரிக்கப்படவேண்டும்.பிரம்மக்கியானவிசாரணையைப்பிராமணனும், அந்தவிசாரணைக்குக் குறைவுவராமல்பாதுகாப்பதைக்ஷத்திரியனும் சாமக்கிரிகளை உதவிசெய்வதைவைசியனும்௸-மூன்றுவகுப்பாருடைய சொற்படிக்கு ஏவல்தொழிலைச் சூத்திரனும் செய்யவேண்டும். இந்தநான்குஜாதிகளில்பிராமணன்வேதத்தையோதவும் ஒதிவிக்கவும்கூடும். க்ஷத்திரியனும்வைசியனும் வேதத்தையோதக்கூடும்.சூத்திரன்வேதத்தையோதவுங்கூடாதுகேட்க்கவுங்கூடாது. துவிஜர்களாகிய பிரம்மக்ஷத்திரியவைசியர்களென்கிறமூன்றுவகுப்பாரும்வேதத்துக்கு அதிகாரிகளாயிருந்தாலும் வேதத்தில்சொல்லுகிறபடி கடவுளையறிந்துக்கொள்கிறவழியானதுவெகுகூரானகத்தியின் முனையில்நடப்பது போல் வெகுகடினமானதென்று கடோபநிஷத்து மூன்றும்வல்லி. ௧௪-வதுவாக்கியத்தில்கண்டிருப்பதினாலே ஞானம்பூரணமடைகிற வரையிலே மூன்றுவகுப்பாரும் அக்கினி மூலமாயும் சூத்திரர்கட்குஅறிவுவிளக்கமுண்டாகிறவரையில் அவர்கள் அர்ச்சை மூலமாயும் கடவுளைவணங்க வேண்டியதென்று கிரந்தங்களேற்பட்டகாலத்தில்ஒவ்வொருவனுடையபுத்தியையும் அளந்துஇன்னான் இன்னஜாதிக்குத்தகுந்தவனென்று ஏற்படுத்தப்பட்ட

தேயொழிய ஜாதியேற்படுவதற்கு ஜனனம் காரணமின்று. அதன் சிலகாலங்கட்குப்பின்பு ஒருவன்எந்தஜாதியானுயிருந்தாலும் அவனுக்கு அறிவுவிளக்கமுண்டாகுமாயின் அவனைச்சிரேஷ்டமான ஜாதியில்அங்கிகரித்துக்கொள்ளயாதொருதடையுமில்லாமல் நடந்தேறிவந்தது. பின்புதுவிஜர்களுக்குஅவர்களில்முக்கியமாய்ப் பிராமணுளுக்கு வரவரஜாதியபிமானமும் தூரபிமானமு முண்டாய்த் தங்களுடைய வெண்ணங்கட்குத் தகுந்தபடிபட்சபாத மான கிரந்தங்களைச்செய்தும் பழையகிரந்தங்களில்தப்புஅபிப்பிராயத்தைச்சேர்த்தும் உண்மைப் பொருளைமறைத்துவிட்டதுமன்றிதாங்கள் நடந்துகொள்ளவேண்டியகடமையையுமறந்துபுத்திகுன்றியவர்கட்குரியஅர்ச்சையை அனுஷடிக்கத்தொடங்கிஅந்தப்பேதைகள் சுவகர்மங்களை யனுஷ்டித்தால் அதினுல்இராச்சியங் கட்கு அநிஷ்டமென்று அவர்களைக்குற்றவாளியாச்சிக் கொலைபாதகஞ் செய்யத்துணிந்தார்கள். காலாதிக்கிரமத்தால் இந்தநடவடிக்கைகள் உறுதிப்பட்டுக்கொண்டேவந்ததுமன்றி ஸமஸ்கிருதவித்பத்தியும் குன்றிவேதார்த்தங்களைக் கவனிக்க ஹேதுவில்லாமல்வேதம்புதைபொருளாய்ப்போய்அஞ்ஞான இருள்பரவஇடமுண்டானதினுலே கிரிஸ்து முதலிய அன்னிய மதத்தாருடைய புனைசுருட்டு ஆன போதனைக்கு நமதுசிறுவர்கள்உட்பட்டுச் சுவரூப நாசமாகவும்பெற்ரோர்பிறந்தோர்பெண்டீர்மக்கள்முதலியஇனத்தார் வயிறெரிய வுங்காரணமுண்டாயிற்று. இப்படிப்பட்ட கொடிய அன்னியாயங்களைவிலக்கவும்உண்மையும்நமதுகடமையும் விளங்கவும்செய்யவேண்டுமென்கிறநல்ல எண்ணத்துடன் வெளிப்பட்டிருக்கிற வேதஸமாஜத்தாருக்கு நாம்அனைவரும் நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும். அதுநம்முடையநீங்கலாக்கடமை யாயிருக்கிறது.

இனிமூன்ருவதுவிஷயத்தைப்பற்றிப்பேசுகிறேன்கடவுள்விஷயத்தில் நாம்நடந்துகொள்ளவேண்டிய கடமையைப்பற்றிநம்முடைய வேதங்களிலும் அதை யனுஸரித்திருக்கிற கிரந்தங்களிலும் தெளிவுறச்சொல்லப்பட்டிருக்கின்றது.

முக்கியமாய் இந்த விஷயத்தில் வேதஸமாஜத்தாரல் வெளியிடப்பட் டிருக்கிற அபிப்பிராயங்களும் வேதஸமாஜத்தில் முக்கிய அபிமானியாகிய வ. இராசகோபாலாசாரியருடன் சிலநாள் நான் கலந்து சம்பாஷித்ததில் ஸமஸ்கிருதபாஷையில் நல்லபாண்டித்தியமுள்ள அவர் என்மீது அன்புகூர்ந்து குறித்துக்காட்டிய அபிப்பிருயஙகளும் கனிச முள்ளவைகளாயிருக்கின்றன.

முண்டகோபநிஷத்து இரண்டாம்முண்டசம் இரண்டாம்அத்தியாயம் ருவதுவாச்கியம். சுவர்க்கம், பூமி. ஆகாசம், மனது, பிராணன் முதலியஇவையெல்லாம் அதையேஆதாரமாகக்கொண்டிருக்கின்றன. அதை யொன்ருன தனிப்பொருளென்று நீ அறிந்துகொள்ளக்கடவாய். வேருென்றையும்ஸ்துதிக்காமல்உன் வாக்கைத் தடுப்பாயாக. இதுதான்முத்திக்கு வழி. கடோபநிஷத்துநான்காவதுவல்லி-கக வதுவாக்கியம் மனதினுல் மாத்திரமேபிரம்மத்தையெட்டக்கூடும். அவ்விடத்தில்பலவெண்பதுஎவ்வளவேனுமில்லை. இவ்விடத்தில்பலவாகப்பார்ப்பவன் மரணத்தினின்றும்மரணத்திற்குச்செல்லுகிருன். ஷெ அத்தியாயம்-௭-வதுவாக்கியத்தில் பிர்ம்மம் பெரியதாயும்திரவியமாயும் மனதினுலும் எட்டி முடியாதரூபத்தையுடையதாயும், சூக்ஷமத்திலும்சூக்ஷமமாயும் பலவிதமாய்விளங்குகிறது. இதுதியானமற்றவர்களுக்கு வெகுதூரத்திலிருப்பினும் தியானிப்பவருக்குத் தூரமற்றிருக்கிறது. தியானமார்க்கத்தால் காண்போருக்குஇவ்விடத்திலேயே, (ஹிருதய) குகைஹயில், விளங்குகிறது.

ஷெ அத்தியாயம்-அவதுவாக்கியம். இவன்கண்களாலாவதுவாக்கினுலாவது மற்ற இந்திரியங்களாலாவது தபசினுலாவது கர்மத்தினுலாவதுகிரிக்கப்படமாட்டான். அவனருளியஞானத்தின் சகாயத்தால் சித்தசுத்தியுடையவன் தியானஞ்செய்துகொண்டுவந்துஅந்தநிஷ்களமான, பரப்பிர்ம்மத்தை, அறிகிருன். சுவேதாசுவதரஉபநிஷத்து முதல்அத்தியாயம்-௧௪-௧௫-வ துவாக்கியங்கள், ஒருவன்தன்தேகத்தை அரணியாக்கிக்கொண்டு பிரணவத்தைமத்தாச்கிக்கொண்டு கடைதலாகியதியானுப்பியாசத்தைக்கொண்டுநன்ருய் மறைந்திருக்கும்தேவனைப்பார்ப்பான். எண்ணெய்போலும் தயிரில்வெண்ணெய்போலும்பூமிக்குள்நீர்போலும் அரணியில் அக்கினிபோலும் சத்தியத்தினுலும்தபசினுலும்தேடுவோனுக்குஅவனுக்குள்ளேயே அதுவிளங்கும். பிருகதாருணியசுருதியில்எவன்பிர்ம்மந்தன்னிலும்புறம்பாயிருப்பதாய் நினைத்துவேறுதெய்வத்தை உபாசிக்கிருனே அவன் ஒன்ருு 5 தெரியாதமிருகத்துக்கொப்பாவான் பிர்ம்மத்தை ஆத்மசுவரூபியாகவே மதித்து எப்போதும்தீரர்கள் தொழவேண்டியதேயன்றி வேருென்றையும் உபாசிக்கக்கூடாது.

தலவகாரஉபநிஷத்து இரண்டாவதுகண்டம்௩-௪-௫-வ துவாக்கியங்கள். பிர்ம்மத்தை நன்ருயறியேனென்பவ னறிவான். அறிவேனென்பவன் அறியான். பிர்ம்மம் தெரியுமெ

ன்பவர்களுக்குத்தெரியாது. தெரியாதென்பவர்களுக்குத்தெரியும். மனதினாலறியத்தக்கதென்றுஅறிபவன் அமிருதனாவான். ஆத்மாவால்வீரியத்தையும் ஞானத்தால் நித்திய பதவியையும்அடைவான். இப்பிறப்பிலேஅறிந்துகொண்டால் பிறகுநிலையுண்டாகும். இப்பிறப்பிலேயறியாவிட்டால் பெருந்துன்ப முண்டாகும். வாஜஸநேய உபநிஷத்து-௧௨-வதுவாக்கியம் இயற்கையைத் தொழுவோர்கள், (நாஸ்திகர்) அந்தகாரத்தை யடைவார்கள். படைப்பைத்தொழுவோர் இன்னும்கொடிய அந்தகாரத்தையடைவார்கள். முண்டகோபநிஷத்து முதல்முண்டகம் இரண்டாம் அத்தியாயம்-௯-வதுவாக்கியம். பலவிதத்திலு மஞ்ஞானத்திலிருக்கும் நாம் புருஷார்த்தத்தை அடைந்துவிட்டோமென்று சிலர் நினைக்கிறார்கள். கர்மங்களைச்செய்பவர்கள்அதில்ஆவல்கொண்டவர்களாக ஆசையினால் நன்றாய்அறிகிறதில்லை. ஆகையால்அவர்கள்கர்ம்மத்தின் பயனொழிந்தால் விழுந்துவிடுகிறார்கள். இப்படிக்குமனதினால்தியானித்துஅறிவினாலறியக்கூடுமான நிலையிலிருக்கிறகடவுளை நம்முடையயுத்தியினால் ஒருவிதஉருவமாக உண்டாக்கப்பட்ட பிரதிமையில் பிரயோகப்படுத்தவும் நாம் போகுமிடமெல்லாம் அவர் நம்முடையகஷ்கசஞ்சியில் அடங்கியிருக்கவும் அல்லதுஓரிடத்திலாவது காலபேதத்தால்பலவிடங்களிலாவது அவரைநாம்ஸ்தாபிக்கிறபடி அவ்விடங்களைவிட்டு அப்புறப்படாமல் நம்முடையஆக்கினைக்கு அவரடங்கிக்கிடக்கவும் அவ்வளவுசத்திநமக்கிருக்குமாயின் அவரை நாம் வணங்கவேண்டியதே யில்லை.

சர்வக்கியரென்று நம்மால் கொண்டாடப்படுகிற அவருக்கு நாமரூபமும் கிரகமும் மனி தநடவடிக்கைகட்குரிய சடங்குகளுமுண்டென்றுநம்புவது ஹேயமானவும் பரியாசமானவும்காரியங்களாயிருக்கின்றன. ஆனைதூரத்தினாலும் ஆலயத்தில்நுழையாதேஎன்கிறநீதிவசனமு மிருக்கிறது. ஆலயத்தில்பூஜைசெய்யப்பட்டவனை விலக்கிவைக்கப்பட்டுமிருககிறது.

வைஷ்ணவர்களிட தெய்வ ஸ்தலங்களில் பேர்பெற்ற பெறிய ஆலயத்தி லுள்ள ஸடகோபத்தைக் கொண்டுவந்து தலைமீது வைக்கக் காட்டினாலொழிய மற்ற ஆலயங்களில்தீர்த்தப்பிரசாதம் அங்கிகரிக்கயோக்கியதையில்லையென்று நடந்துவருவது வெகுவிந்தையாயிருக்கிறது. விக்கிரகங்களைவிடச்சடகோபத்துக்குயோக்கிதையில்மாத்துஏறினதின் நியாயமெனக்குத் தோன்றவில்லை. அர்ச்சையைப்பற்றி வேதஸமாஜத்தாருடைய வுத்தேசியத்தைத் தெரிந்துகொண்ட கும்பகோணத்திலுள்ளசிலபணடிதர்கள் கோபாவேஷத்தால் வேதஸமாஜத்தாரைத் தூஷிக்கப்புகுந்து அர்ச்சைக்கு ஆதாரஞ்சொல்லப்புகுந்தார்கள். அவர்களைநான் சோதித்ததில் அவர்களுக்குள்ளடங்கியிருந்து வெளிப்பட்டஆதாரமோவேதங்களுக்குவிரோதமானபுராணக் கட்டுக்கதைகள்தான். உண்மையாகவேவேதத்தாலன்றிப் புராணகதையால்ஆசரணைக்குவந்திருக்கிறஅர்ச்சாவிஷயத்தில்ஆவேசமுள்ள ஷைபண்டிதர்களல்லாமல் பின்னும்நானறிந்த தேசங்களிலுள்ளபண்டிதர்களையும்சோதித்தேன். அவர்களில்சிலர் கும்பகோணத்திலுள்ள பண்டிதர்களுக்கொப்பானவர்கள். பின்னும்சில்ர்அர்ச்சைக்குவேதத்தில்பிரமாணமில்லையென்று என்னிடத்தில் இரகசியமாய் வெளியிட்டார்கள்.

நம்முடைய ஆசாரத்தை நாமே விட்டொழித்து அனாசாரத்தைக் கைக்கொண்டிருப்பது நிந்தாஸ்பத முள்ளதா யிருக்கின்றது. வேதஸமாஜமேற்பட்டு இரண்டுவருட மாகியும் இதுவரையில் அர்ச்சைக்கு வேதப்பிரமாணஞ்சொல்லயாரும் ஏற்படாமையால் இதுவரையிலெனது சோதனையில் நான்தெரிந்துகொண்டிருக்கிறபடிஎனது நம்பிக்கையில் அர்ச்சைக்குவேதப்பிரமாணமில்லையென்பதுநிச்சயம். வேதப்பிரமாணஞ்சொல்ல யாருக்காவது அவகாசமுண்டானால் அதை வேதஸமாஜத்தாருக்கும் எனக்கும் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்லிமுடித்தார்.

இந்தப்பிரசங்கத்தைச் சபையிலுள்ள அனைவரும்கேட்டு ஆமோதித்து மனமகிழ்ந்தார்கள்.

| | |
|---|---|
| ௨௮௬௬ (ஹு)<br>ஏப்பிரல்மீ-ககவ<br>உடுமலைப்பேட்டை. | இங்ஙனம்,<br>தங்கள்விதேயன்<br>கோ-கிருஷ்ணய்யர். |

## பகவத்கீதை.

### ௧௮-வது-அத்தியாயம்.

(தொடர்ச்சி.)

௧௬. இதில் (கர்மத்தின் கண்காரணம்) இவ்வாறிருக்க, எவன் தன்னையே கர்த்தாவாக பார்க்கின்றானோ (அறிகின்றானோ)அவன் துர்புத்தியுடையவனாய் அத்துர்புத்தியினால் (உண்மையைப்) பார்க்கிறதில்லை.

௧௭. எவனுக்குத்தான் என்கிற பாவமில்லையோ, எவனுடையபுத்தி லிப்தமான்தன்

றான், அவன் இந்தஜனங்களைக் கொன்றும் கொல்லாதவனும், (அதனால்)பந்தப்படாதவனுமாகின்றான்.

௧௮. கர்மத்துக்கேதுவாகின்றவை கியானம், கியேயம், கியாதா (என்றால் அவற்றைஅறிவோன்) எனமூன்றுவிதம்; கர்மஸமுதாயம், காரணம், என்றும் கர்மம்என்றும், கர்த்தாவென்றும், மூன்றுவிதம்.

௧௯. சாங்கியாதி குணமுள்ள சாஸ்திரங்களில், கியானமும், கர்மமும், கர்தாவும் (சத்வரஜஸ்தமோ) குணபேதங்களால் மூன்றுவிதமாக சொல்லப்படுகின்றன. அவைகளை (அக்கியானாதிகளை) அச்சாஸ்திரக்கிரமப்படி கேட்பாய்.

௨0. எந்தக்கியானத்தினால் பின்னங்களாகிய ஸர்வபூதங்களிலும், அகண்டமானவும், நாசரஹிதமானவும், ஏகமானவும், (பரமாத்ம) ஸ்வரூபத்தைப் பார்க்க படுகின்றதோ அந்க்தகியானஞ்சத்வகுணத்தாலுண்டாவதாக அறி.

௨௧. எந்தக்கியானத்தினால் ஸர்வபூதங்களிலும் ஏகமாய் (உள்ளபரமாத்மா) பேதானுசிந்தையால், (பின்னங்களாகிய பலவற்றிலும்) பின்னமானதாகவும் (என்றால் ஏகமல்லாத பலவிதபாவங்களாகவும்)நாநாவிதஸ்வரூபமுடையதாகவும், அறியப் படுகின்றதோ அந்தகியானம் ராஜஸகுண ஜனிதமாக அறி.

௨௨. எந்தக்கியானத்தினால் (அப்பரமாத்மா)ஒன்றான(என்றால் ஒருவஸ்துவாகிய)பிரதிமாதிரூபத்தில் கூடியதாகி, ஸர்வமானதுபோலிருப்பதாக பாவிக்கப் படுகிறதோ, அந்தநிஷ்காரணமானவும், அல்பமானவும், அசத்தியமானவும், கியானமானது தாமஸகுணஜனிதமானதாகஅறி. (எங்கும்வியாபித்த ஈஸ்வரன் ஒருபொருளாகிய பிரதிமாதிகளில் இருப்பதுபோல் பாவிக்கும் அர்ச்சை அதிஹேயமானதென்பதிதனால் விளக்கப்படுகிறது.)

௨௩. எந்தகர்மம் ஆவசியகமானதாய்தற்பிரயோஜனமற்றதாய், பலாபேக்ஷையற்றவனால்இராகத்வேஷங்களையற்று செய்யப்படுகின்றதோ, அந்தகர்மம், சாத்விககுணசம்பந்தமானதாக சொல்லப்படுகின்றது.

௨௪. கர்மத்தை விரும்பினவனால் அஹங்காரத்தோடுங்கூடசெய்யப்படுகிறஅதிதுக்கத்தையுண்டாக்கும் அந்தகர்மம் இராஜசகுணசம்பந்தமானதாக சொல்லப்படுகின்றது.

௨௫. இனிவரப்போகிறதையும்(என்றால் காரியத்தையும்) அதனால்விளையும்நாசத்தையும், ஹிம்ஸையையும், தன்சாமர்த்தியத்தையும் விசாரியாமல், மோஹத்தினால்(அக்கியானத்தினால்)எந்தகர்மம் தொடங்கப்படுகின்றதோ அது, தாமஸகுண சம்பந்தமானதாக சொல்லப்படுகின்றது.

௨௬. விடப்பட்ட ஆசையுடையவும் (என்றால் ஆசக்தியற்றவனும்) அஹங்காரத்தையற்றவனும் தைரியோத்ஸாஹங்களோடுங் கூடினவனால், சித்தியிலும் அசித்தியிலும் விகாரமற்றவனும் (என்றால் சமசித்தமுள்ளவன்) ஆகியகர்த்தா (கர்மத்தைச்செய்வோன்) சாத்விகனென்று சொல்லப்படுகிறான்.

௨௭. அநுராகமுடையவனும், கர்மபலத்தையடைய நிச்சயித்தவனும், கிரவியாபேக்ஷையுடையவனும், பிறரைஹிம்ஸிக்குந் தன்மையுடையவனும், அசுசியானவனும், சுகதுக்கங்களோடுகூடினவனும், ஆகியகர்தா,இராஜஸன்என்று சொல்லப்படுகிறான்.

௨௮. மனோநிக்கிரகமில்லாதவனும், புத்திஹீனனானவனும்,ஸ்தப்தனானவும்,(என்றால் பிடிவாதமுள்ளன்)அசட்டையுள்ளவனும்பிறரை அவமானஞ் செய்கின்றவனும் மந்தனும் துக்கசீலனுமாய் காரியங்களை வெகுஆலசியத்தோடும் நடத்தும் கர்தா தாமஸன் என்று சொல்லப்படுகிறான்.

௨௯. ஒய் தனத்தைஜயித்தவனே! மீண்டுமீண்டு சொல்லப்படுகிற குணங்களால் ஆகிய மூன்றுவித புத்திபேதங்களையும் தைரியபேதங்களையும் கேட்பாய்.

௩0. ஓய்பார்த்தனே! எந்த புத்தியானது பிரவர்த்திநிவர்த்திகளையும்(என்றால்கர்மாகர்மமார்க்கங்களையும்,)கர்த்தவியா கர்த்தவ்வியங்களையும்(என்றால் செய்யத்தகுந்தகர்மம், செய்யதகாதகர்மம்) பயாபயங்களையும், பந்தாபந்தங்களையும், மோக்ஷத்தையும் அறிகின்றதோ அதுசாத்விகபுத்தியென்னப்படும்.

---

## நிருபம்.

### அர்ச்சையின் ஓர்பிரயோஜனம்.

ம-ா-ா. தத்துவபோதினியின்கர்த்தரவர்கட்கு.

ஐயா.

யான் இதனடியில் வரையும், ஓர் மிகத்துயரமானசங்கதியடங்கிய, சிலவரிகளுக்குஉமது விலையற்றமாணிக்கியமாகியபத்திரிகையின்ஓர்மூலையில் சிறிதுஇடந்தந்தருள்வீராக.

இவ்வருஷம் காஞ்சீநகரத்தில் வரதராஜசுவாமி திருவிழா ஏழாம்நாள் ரதோச்சவத்தன்றையதினம் சாயங்காலம் நேரிட்ட மிகத்துயரமான சங்கதியைக்கேட்க உடம்புநடுங்கி மயிர்க்கூச்செடுக்கிறது. அன்றையதி

ணம் தேர் மஞ்சள்நீர் கால்வாயுக்கு ஸமீபமாக வோர்சார்வில்வந்துச்கொண்டிருக்கையில் தேரின் சிகரத்திற்சட்டிய குடை முறிந்து கீழேவிழுந்தது. விழவே அக்கம்பக்கங்களிலிருந்த ஜனங்கள் என்னமோ விபரீதம் வந்துவிட்டதென்று பயந்து தயங்கினின்றுர்கள். அவர்கள் மூடபக்தியால் விபரீதமென்றுன்னியது விபரீதமாகவே முடிந்தது. எப்படியெனில் குடைவிழுகிறதைப் பார்த்துப் பிரமித்திருந்த நால்வர்மேல் தேரின் உருளைகளோடி ஓர்நிமிஷத்தில் அவர்களை மிகவுங் கோரமான மரணத்துக் குள்ளாக்கிற்று. ஒருவன் தலைநசுங்கி இறந்தான. மற்றவர்களுக்குப் பலவிடத்தில் காயப்பட்டு உடனே மறித்தார்கள். இச்சமாசாரம் கும்பலில் பரவியவுடனே ஒவ்வொருவனும் தன்னைச்சார்ந்தவர்கள்தா னிறந்தார்களோவென்று ராமா! கிருஷ்ணா! சேஷா! சுப்பா! என்று கூப்பிடத்தலைப்பட்டனர்.

கோயில்களில் விக்கிரகங்களைவைத்துப் பூஜிக்கிற (அல்லது அர்ச்சையைத்தொழுகிற) தினல் நேரிடுகிற பலதுன்பங்களில் இது ஒன்று. மூன்றுபெயர்கூட சவுக்கியமாய் நிற்கிறத்துக் கிடமில்லாத தேர்களை மலைகள்போல உன்னதமாய்க்கட்டி, அவைகளை இழுக்கிறத்துக்குந் தகுந்த உபகரணங்களில்லாமல் வருத்தப்பட்டு, அனேகரை மேற்சொல்லியபடி கோரமான மரணத்துக் குள்ளாக்குவதினல் என்ன பிரயோஜனமோ என் புல்லறிவுக்கெட்டவில்லை. அன்றியும் ஜகன்னுதம்முதலிய விடங்களில் தேரின்கீழே விழுந்து மறிப்பதை வெகு பிரயோஜனமுள்ளதாய் நினைக்கிருர்கள். ஐயோ இவ்விதமான மூடபக்திக்கு நாமென்னசெய்யலாம்! மேலும் தேர்கள் சாய்வதினுலும, அவைகளை இழுக்கக்கட்டிய வடங்கள் அற்றுப்போவதினுலும், அவைகளில் கட்டிய யாளிமுதல்ய பொம்மைகள் கட்டற்று விழுவதினுலும் பலவிடங்களில் பலமுறைகளில் நேரிட்ட மரணங்களை யெடுத்தெழுதப்புகின் விரியுமாதலால், இத்தேர்களினுல் உண்டாகிற பலதுன்பங்களைத் தூக்குத்தொகையாய் எடுத்துக்காட்டினேன். ஆகையால் சத்தியாய் ரதோச்சவங்களையாவது, கவரன்மெண்டார் நிறுத்தினுல் மிகவும் அனுகூலமாயிருக்கும்.

கடசியாக பிரம்மசமாஜ, வேதசமாஜத்தார் சொல்லும் நல்லவழியிற்செல்லாமல் மூடபக்தியே மேற்கொண்டு மேற்சொல்லிய துன்பத்தை விளைக்கிறதாகிய அர்ச்சையைப் பூஜிக்கிறவர்களுக்கு, அக்கெட்டவழியினின்றும் நீங்கும்படி, ஞானநந்தசுவரூபியாகிய கடவுள் நல்லறிவு அளிப்பாரென்று அவரை இடைவிடாது பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்
ஓர்மைலைவாசி.

## சந்தாதாரர் விளம்பரம்.

தத்துவபோதினிக்குக் கையொப்பம்செய்பவர்கள்அனுப்புந்தொகைச் சேர்ந்ததைக்குறித்து, உத்தரப் பிரத்தியுத்தரங்கள் வைத்துக்கொள்ள அனுகூலப்படவில்லை யாகையால், அந்தந்த மாதத்தில் வரும் கையொப்பங்களைக் குறித்து, மருமாதம் தத்துவபோதினியில் ஒருஅட்டவணைப்பிரசுரம் செய்யப்படும். கடந்த மாதத்தில் வந்தசந்தாதாரர்களுக்கு அட்டவணை வருமாறு.

### சந்தாதாரர்களுடைய அட்டவணை.

| | |
|---|---|
| கஞ்சி-வீராசாமிபிள்ளை | க |
| சென்னை-பா-சோமசுந்திரசெட்டியார் | க |
| ,, நா-சுப்பராயசெட்டியார் | க |
| ,, வா-செங்கல்வராயசெட்டியார் | க |
| கி-இரத்தினபிள்ளை | க |
| ,, பு-விஜயரங்கபிள்ளை | க |
| ,, கா-கதிர்வேலுமுதலியார் | க |
| ,, பா-மோ-முருகேசமுதலியார் | க |
| ,, சுப்பராயபிள்ளை | க |
| இராமேஸ்வரம்-முத்துராமலிங்கம்பிள்ளை | க |
| கோயம்புத்தூர்-குப்டசாமிஅய்யர் | க |
| திின்னவல்லி-சின்னசாமிஅய்யர் | க |
| பெங்களூர்-வீரப்பிள்ளை | க |
| ,, ஆ-நாராயணசாமிமுதலியார் | க |
| ,, யெ-கோவிந்தசெட்டியார் | க |
| ,, ஆ-ம-அப்பாசாமிபிள்ளை | க |
| ,, ஆ கந்தசாமிமுதலியார் | க |
| ,, ஆ-க-முத்துசாமிமுதல்யார் | க |
| ,, த-மதுரைமுத்துபிள்ளை | க |
| ,, ப-சதாசிவமுதலியார் | க |
| ,, வே-குமாரசாமிமுதலியார் | க |
| ,, ஆ-குருசாமிமுதலியார் | க |
| பெங்களூர்-வே-வெஙகிடராமமுதலியார் | க |
| ,, சே-சின்னையன் | க |
| ,, மம்மதுகாசிம்சாயப்பு | க |
| ,, வே-நாராயணசாமிமுதலியார் | க |

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.